# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 28 புதன்கிழமை 13.08.2025 கதிர் 284



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

Yarl Muttram

Youtube Channel






## மௌலானா இலங்கை வர சம்மதம்

கொழும்பு, ஓக. 13

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடகச்செயலாளரான அசாத் மௌலானா வெகுவிரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று அரசின் முக்கிய அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில்கிழக்கு மாகாண முன்னாள்முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தனுக்கும் தொடர்புகள் இருப்பதாக அசாத் மௌலானா என்றழைக்கப்படும் ஹன்சீர் முஹம்மத் பரபரப்பு தகவல்களை வெளியிட்டிருந்தார்.

அத்துடன் பிள்ளையானின் வேண்டுகோளின் பிரகாரம் பிள்ளையானுக்கு நெருக்கமாகத் தான் உள்ளிட்ட குழுவொன்று இராணுவப் புலனாய்வுத்துறையின் முன்னாள்

7 ➤

# ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் எதிரணி ஈடுபடவில்லை!

## முஜிபூர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 13

"ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சியும் செய்யவில்லை" - என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் மேலும் கூறியதவாது:-

"இந்த அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அந்தப் பொறுப்பில் இருந்து விலகிவிட முடியாது. நாம் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சூழ்ச்சி செய்யவில்லை. எனவே, சிறுபிள்ளைத்தனமான அறிவிப்புகளை விடுப்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிறுத்த வேண்டும்.

செய்ய முடியும் என உறுதியளித்தே அநுர தரப்பினர் ஆட்சிக்கு வந்தார்கள். எனவே, உறுதிமொழிகளை நிறைவேற்றிக் காட்ட வேண்டும். அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் வரை நாம் அரசைப் பாதுகாப்போம்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்திக்குள் எவ்வித குழப்பமும் இல்லை."
- என்றார்.



### மட்டக்களப்பில் இன்று

## சாணக்கியன் தலைமையில் நீதி கோரி கவனயீர்ப்புப் போர்

மட்டக்களப்பு, ஓக. 13

செம்மணி, முல்லைத்தீவு மற்றும் சட்டவிரோத சமூகச் செயற்பாடுகளுக்கான நீதி கோரும் கவனவீர்ப்புப் போராட்டம்

7 ➤




## தொண்டைமானாறு கடல்நீரேரியில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம்!

அச்சுவேலி, ஓக. 13

செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை காலை வழிபடச் சென்ற பெண்ணே மாலை ஆலயத்துக்குப் பின்புறமாக உள்ள தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி, தோப்பு பகுதியைச்சேர்ந்த இராஜலிங்கம் சுபாஷினி (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தப்பெண்நேற்றுக்காலை வீட்டில் இருந்து ஆலயத்துக்குச் செல்வதாகச் கூறி சென்ற நிலையில் இரவாகியும் வீடு திரும்பாத

7 ➤



## பேருவளை வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு!




பேருவளை, ஓக. 13

வீடொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறையில், பேருவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதனாகொடகம

7 ➤



## சீதுவையில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் படுகொலை!

நீர்கொழும்பு, ஓக. 13

சீதுவையில் இனந்தெரியாத கும்பல் ஒன்றினால் நபர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

7 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -




## குருநாகல் வைத்தியசாலையில் மருந்தாளுநர்கள் அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, ஓக 13

குருநாகல் போதனா வைத்தியசாலையில் இன்று 24 மணிநேர அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்க மருந்தாளுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தகுதியற்ற மருந்து கலவை நிபுணரை வைத்தியசாலைக்கு நியமித்ததற்கு எதிராக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அந்த சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்தார்.

அதன்படி, இந்த அடையாள வேலைநிறுத்தம் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமானது.


தகுதிவாய்ந்த மருந்தாளுநர்கள் தங்கள் சேவைகளை வழங்கும் போது, சேவை அவசியமின்றி ஒரு மருந்து கலவை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு இரண்டு முறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அஜித் திலகரத்ன குறிப்பிட்டார்.

இருப்பினும், அதிகாரிகள் இந்த விடயத்தை புறக்கணித்ததன் காரணமாக இவ்வாறு அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## பேருந்துகளில் அறிமுகமாகும் புதிய திட்டம்









காழும்பு, ஓக 13

நீண்ட தூர பேருந்துகளில் ஏற்படும் விபத்துகளைக் குறைப்பதற்கான ஒரு முன்னோடித் திட்டம் தனியார் துறையின் பங்களிப்புடன் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அரச மற்றும் தனியார் பேருந்துகளில் செயற்கை நுண்ணறிவு (AI) கமரா அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முயற்சியின் கீழ், ஓட்டுநர் நடத்தையைக் கண்காணிக்கவும், தேவைப்படும்போது எச்சரிக்கைகளை வழங்கவும் 40 யுஐ கமராக்கள் பேருந்துகளில் நிறுவப்படவுள்ளன.

இந்த அமைப்பு மூலம் ஓட்டுநர் சோர்வு, மயக்கம் அல்லது கண் மூடல் போன்ற அறிகுறிகளைக் கண்டறிய முடியும்.

அத்துடன் போக்குவரத்து விதிகள் மற்றும் ஆசனப்பட்டி பயன்பாடு ஆகியவற்றின் இணக்கத்தைக் கண்காணிக்க முடியும்.

இது ஓட்டுநர்களுக்கு சமிக்ஞைகளை வழங்கும் மற்றும் பேருந்தை கட்டுப்படுத்தவும் உதவும். இந்த திட்டத்தின் முதல் கட்டம் கதிர்காமம் பேருந்து சாலையில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள்,

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது பல நீண்ட தூர பேருந்துகளில் யுஐ கமராக்கள் பொருத்தப்பட்டன.(ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# மன்னாரில் வழிமறிக்கப்பட்டிருந்த காற்றாலைப் பாகங்கள் விடுவிப்பு!

மன்னார், ஓக 13

மன்னாரில் பொதுமக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்படும் காற்றாலை மின் கோபுரத்தின் பாரிய உதிரிப்பாகங்களை ஏற்றி வந்த வாகனத்தை நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் தொடர்ந்து இன்று காலை வரை மன்னார் தீவுக்குள் நுழைய விடாமல் பொதுமக்கள் வழிமறித்துப் போராட்டம் நடத்தியமையை அடுத்து அங்கு ஏற்பட்ட பதற்ற நிலைக்கு இன்று காலை மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இணக்கமான தீர்வு காணப்பட்டது.

பாரிய உதிரிப் பாகங்களுடன் மன்னார் தீவுக்குள் நுழைய விடாமல் வழிமறிக்கப்பட்டிருக்கும் ஐந்து பெரிய வாகனங்களையும் தீவுக்குள் நுழைய அனுமதிக்கவும், அதன் மூலம் கொண்டுவரப்படும் உதிரிப்பாகங்கள் உடனடியாக காற்றாலையாகக் கட்டமைக்கும் வேலையை முன்னெடுக்காமல் இடைநிறுத்தி வைக்கவும் இன்று நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இணக்கம் கண்டன.

போராட்டம் நடத்தும் பொதுமக்கள் சார்பில் நீத மன்றத்தில் இன்று காலை முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்த இணக்க ஏற பாட்டை பொலிஸ் தரப்புடன் நீதிமன்றத்தில் வாதாடி செய்தார்.

இதன்படி காற்றாலை உதிரி பாகங்களுடன் வரவேண்டிய இன்னும் எழுபது வாகனங்களின் அணியில் இந்த ஐந்து வாகனங்களை மாத்திரம் தீவுக்குள் அனுமதிக்கவும், அதில் எடுத்துவரப்பட்ட பொருள்களை இறக்கி வைத்து விட்டு வாகனங்கள் திரும்பவும், எடுத்துவரப்பட்ட பொருள்களைக் கொண்டு காற்றாலைக் கட்டுமானப் பணி இப்போதைக்கு முன்னெடுக்கப்பட மாட்டாது என்பதும் நீதிமன்றத்தில் இணங்கப்பட்டன.

இந்த வாகன அணியை நேற்றிரவு பொதுமக்கள் மன்னார் தீவின் நுழைவாயிலில் வழி மறித்தமையை அடுத்து அங்கு தொடர்ந்து பதற்ற நிலை நிலவியமை தெரிந்ததே.

இந்த விடயத்தை இன்று பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

'வாகனங்கள் வீதியை வழிமறித்து நிறுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே மக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் போராட்டம் நடத்துவோம் என்று போராட்டத்தரப்பால் அளிக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.' - எனத் தெரிவித்து இந்தப் போராட்டத்தை நடத்தும் இரு குருமார்கள் உட்பட அறுவருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கைக்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

மன்னாரில் நேற்று நள்ளிரவு பதற்றம் ஏற்பட்டதை அடுத்துப் போராட்ட ஏற்பாட்டாளர்கள் அது குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு இன்று விடிகாலை அறிவித்தனர். தாம் உடனடியாகக் கொழும்பில் இருந்து வாகனத்தில் காலையில் நீதிமன்ற நேரத்துக்கு வந்து சேர்வார் என்று சுமந்திரன் அறிவித்தார். அதன்படி காலை ஒன்பதரை மணிக்கு அவர் நீதிமன்றத்தில் முன்னிலையானார்.

"பொது மக்களுக்கு தொல்லை கொடுப்பது தொடர்பான சட்ட ஏற்பாட்டை, பொதுமக்களுக்கு தொல்லை கொடுக்கும் தரப்புக்கு எதிராகத்தான் பிரயோகிக்க வேண்டும். காற்றாலை அமைப்பதும், அதனால் ஏற்படுகின்ற விடயங்களும்தான் பொதுமக்களுக்குத் தொல்லை கொடுக்கும் விவகாரங்கள்.

அது குறித்து பொதுமக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்கள். காற்றாலை அமைப்பதற்கு முயற்சிப்பவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட வேண்டிய சட்டத்தைப் பாதிக்கப்படுகின்ற பொதுமக்களுக்கு எதிராக பிரயோகிக்க முடியாது" - என்று சுமந்திரன் நீண்ட சட்ட வாதத்தை முன்வைத்தார்.

சுமார் இரண்டு, இரண்டரை மணி நேரம் சட்ட விவாதம் தொடர்ந்தது. காற்றாலை அமைப்புத் தொடர்பான தரப்புகளோடு இடையில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறுவதற்காகப் பொலிஸாருக்குக் கால அவகாசம் வழங்கி இரண்டு தடவைகள் வழக்கு இடைநிறுத்தப்பட்டன.

இதன் பின்னர் நீதிமன்றத்தல் நீதிவான் எம்.எம். சாஜித்தின் வழிகாட்டுதலில் தீர்வு ஒன்றுக்குச் சுமந்திரன் இணக்கம் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், வழிமறிக்கப்பட்டிருக்கும் ஐந்து வாகனங்களையும் இப்போதைக்கு விடுவிக்கவும், அதன் மூலம் கொண்டுவரப்படும் உதிரி பாகங்கள் காற்றாலை அமைக்கும் பணிக்கு உடனடியாக பயன்படுத்தப்படாமல் இறக்கி வைக்கப்படும் என இணக்கம் காணப்பட்டது.

'பொது மக்களுக்குத் தொல்லை கொடுக்காமல் போராட்டம் நடத்துவோம்' என்று போராட்டக்காரர்களால் முன்னர் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட இணக்கம் மீறப்பட்டதாகப் பொலிஸாரால் இன்று காலை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் சுமந்திரனின் சட்டவாதத்தால் முறியடிக்கப்படாவிட்டால் மேற்படி ஆறு போராட்டக்காரப் பிரதிநிதிகளும் நீதிமன்ற உத்தரவில் கைது செய்யப்படக்கூடிய சூழல் இருந்ததாக பிற சட்டத்தரணிகள் தெரிவித்தனர்

## மடு அன்னையின் ஆவணி திருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் யாத்திரை






மடுமாத ஆலயத்தின் ஆவணி திருவிழா வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தின் பல பாகங்களில் இருந்தும் இன மத பேதமின்றி மடு திருத்தலம் நோக்கிய பக்தர்களின் நடைபயணம் நேற்றைய தினம் (12-08-2025) பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் பகுதியை வந்தடைந்தது.

எதிர்வரும் 15ஆம் திகதி மடு அன்னையின் ஆவணி திருவிழா நடைபெறவுள்ள நிலையில் வடக்கில் உள்ள மாவட்டங்களில் இருந்து மக்கள் ஒவ்வொரு வருடமும் நடைபயணம் மேற்கொண்டு மடு திருத்தலம் நோக்கி பாதயாத்திரையாக செல்வது வழமை.

அதே போல் இம்முறையும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடக்கின் பல பாகங்களிலிருந்தும் நடைபயணம் மேற்கொண்டு வருகின்றார்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, இரணைப்பாலை, வற்றாப்பளை பகுதிகளில் இருந்து கட்டம் கட்டமாக மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்ய நடைபயணம் மேற்கொண்டு வருகின்றார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணம் கரவெட்டி, துன்னாலை சதசகாய மாதா ஆலயத்திலிருந்து கடந்த 8ம் திகதி நடைபயணம் மேற்கொண்டிருந்த பக்தர்கள் நேற்று காலை நட்டாங்கண்டல் பகுதியை வந்தடைந்துள்ளனர்.

இவ்வருடம் அதிகளவான மக்கள் நேர்த்தி கடன்களை நிறைவுசெய்ய கட்டம் கட்டமாக நடைபயணம் மேற்கொண்டுள்ளதாக பக்தர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை இந்து சகோதரர்களும் இனமத பேதமின்றி நடை பயணத்தில் கலந்து கொண்டு மடு நோக்கி பயணிக்கின்றனர் இதேவேளை நடை பயணத்தில் கலந்துகொண்டுள்ள யாத்திரிகர்களின் சிரமம் கருதி குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மாந்தை கிழக்கு பிரதேச சபை செயற்படுத்தி வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் ராசையா நளினி அவர்கள் தெரிவித்தார் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த பக்தர்கள் முல்லைத்தீவு - மன்னார் எல்லை கிராம பாதையான பாண்டி யன்குளம், நட்டாங்கண்டல்,பாலம்பிட்டி சென்று அங்கிருந்து மடுவிற்கு செல்வதாக தெரிவித்துள்ளார்கள்.

(ஐ)

## கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையத்தினை பார்வையிட்ட அமைச்சர் வசந்த சமரசிங்க



*கிளிநொச்சி, ஓக 13*

*கிளிநொச்சி – அம்பாள்குளம் பகுதியில் கடந்த 2017ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்தினை வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க இன்று (12–08–2025) நேரடியாக சென்று பார்வையிட்டுள்ளதுடன் இதன் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார்.*

*கிளிநொச்சி – அம்பாள்குளம் பகுதியில் சுமார் 150 மில்லியன் ரூபா செலவில் 40 கடைத் தொகுதிகளை கொண்டு நிர்மாணிக்கப்பட்ட விசேட பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.*

*இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையமானது உரிய பயன்பாடின்றி 40 கடைகளில் 30 வரையான கடைகள் நீண்ட காலமாக மூடியுள்ளன.*

*இந்த நிலையில் குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேரில் சென்று பார்வையிட்டார்.*

*அத்துடன் முழுமையாக இயங்காதுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை முழுமையாக இயங்கச்செய்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.*

*இவ்விஜயத்தின் போது யாழ் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன்,மாவட்ட அரச அதிபர் எஸ். முரளிதரூ உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.*

*(ஐ)*

# முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு ரேஷன் வழங்கும் திட்டம்: 21 லட்சத்து 70 ஆயிரத்து 454 பேர் இதில் பயன்பெறுவர்கள்

தமிழ்நாட்டில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் தொடங்கி வைத்தார். இதன்மூலம் 21,70,454 பயனாளிகள் பயன்பெறுவார்கள்.

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடு தேடி சென்றடைய செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய நோக்கின் அடுத்த கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேஷன் பொருட்களை விநியோகம் செய்யும் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது.



மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்பு கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவு பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலை கடைகளை சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளுமாக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கே சென்று ரேஷன் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களின் விவரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையிடம் இருந்து பெறப்பட்டு, கள அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மின்னணு எடை தராசு, நீ-ழுளு இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களை பாதுகாப்பாக தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலை கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர்.

70 வயதுக்கு மேல் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்கும் இத்திட்டத்திற்கு அரசுக்கு ரூ.35.92 கோடி செலவாகும். மக்கள் நலன் சார்ந்த இத்திட்டம், நலிவுற்ற பிரிவினரின் வாழ்வாதாரத்தை சிறப்புற செய்வதுடன் அவர்தம் உணவு பாதுகாப்பையும் உறுதிசெய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை' சென்னை, தண்டையார்பேட்டை கோபால் நகர் மற்றும் அன்னை சத்யா நகரில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்த பயனாளிகளின் இல்லங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை நேரில் சென்று ரேஷன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, பயனாளிகளிடம் உரையாடினார். அப்போது முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், தங்களுக்கு வீடு தேடி வந்து ரேஷன் பொருட்களை வழங்குவதால், மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது என்றும், குடும்பத்தில் ஒருவராக தங்களது சிரமங்களை அறிந்து இத்திட்டத்தை செயல்படுத்தியதற்காக முதல்வருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்றைய தினம் 'முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்' சென்னையில் தொடங்கி வைத்துள்ள நிலையில், மற்ற மாவட்டங்களில் அமைச்சர்கள், எம்பி, எம்எல்ஏக்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று, இந்த திட்டத்தை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எம்எல்ஏக்கள் ஜே.ஜே. எபினேசர், இரா.மூர்த்தி, ஆர்.டி.சேகர், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், கே.பி.சங்கர்,

தலைமை செயலாளர் முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலாளர் சத்யபிரதா சாகு, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நந்தகுமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஜான் லூயிஸ், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் எஸ். சிவராசு, கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) சா.ப.அம்ரித், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் வாயிலாக 34,809 நியாயவிலை கடைகளை சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்கள் பயன்பெறுவர்.

மேலும் 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத்தினாளிகளுமாக மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படும்.

மின்னணு எடை தராசு, நீ-ழுளு இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களுடன் மூடிய வாகனங்களில் குடிமைப் பொருட்களை பாதுகாப்பாக தகுதியுள்ள பயனாளர்களின் இல்லத்திற்கே சென்று நியாயவிலை கடை விற்பனையாளர்கள் விநியோகிப்பர். (ஐ)



## 2026ல் மீண்டும் திமுக ஆட்சி: வைகோ உறுதி

வரும் 2026ல் தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி தான் அமையும் என வைகோ தெரிவித்துள்ளார். தேனி மாவட்டம், கம்பத்தில் மதிமுக சார்பில் நேற்று முன்தினம் இரவு பொதுக்கூட்டம் நடந்தது. தேனி மாவட்டச்செயலர் வி.எஸ்.கே.ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். கூட்டத்தில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ பேசியதாவது:

பெரியாறு அணை உரிமை மீட்புப் பிரச்னையில் கேரள அரசுக்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டியுள்ளது. தேனி மாவட்டம், பொட்டிப்புரத்தில் சுற்றுச்சூழலை பாதிக்கும் நியூட்ரினோ ஆய்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, திட்டத்தைச் செயல்படுத்த விடாமல் தடுத்தோம். அப்போது, கேரள அரசு என்னை ஆதரித்தது.

தற்போது கேரள அரசு, அணைகள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றி பெரியாறு அணையில் முழுக் கொள்ளளவு தண்ணீர் தேக்க முட்டுக்கட்டை போட்டு வருகிறது. முல்லைப் பெரியாறு அணை உரிமை மீட்புப் போராட்டத்தில் பங்கேற்க நான் எப்போதும் தயாராக உள்ளேன். வருகிற 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக வெற்றி பெற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மீண்டும் திமுக ஆட்சி அமையும். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

## தந்தை–மகன் மோதல் அன்புமணியின் செயல் தலைவர் பதவியை பறிக்க ராமதாஸ் முடிவு



பாமகவில் தந்தை-மகன் மோதல் போக்கு உச்சகட்டத்தை எட்டியுள்ள நிலையில், ராமதாஸ் நடத்தும் பொதுக்குழுவுக்கு முன்பாக அன்புமணியின் செயல் தலைவர் பதவியை பறிக்க ராமதாஸ் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக அவர் தனது சட்ட குழுவுடன் தீவிர ஆலோசனையில் இறங்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் அன்புமணி நடத்திய பொதுக்குழு சட்டவிரோதமானது என்று தேர்தல் ஆணையத்திற்கு கடிதமும் அனுப்பி உள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ், தலைவர் அன்புமணி உட்கட்சி விவகாரம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. பாமக தற்போது இரு அணிகளாக பிரிந்து செயல்பட்டு வருகிறது. இந்த சூழ்நிலையில், அன்புமணி அணி, கட்சி பொதுக்குழு, வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு உரிமை கோரி ஆர்ப்பாட்டம் என்று ஒரு புறம் பரபரப்பாக இயங்கி வருகிறது. மறுபுறம் ராமதாஸ் அணியோ, மகளிர் மாநாடு, பொதுக்குழு என்று தனது ஆதரவாளர்களுடன் தனி டிராக்கில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

இதனால் பாமக தொண்டர்கள் உச்சகட்ட குழப்பத்திலும், வேதனையிலும் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, 2026 சட்டமன்றத் தேர்தல் நெருங்கி கொண்டிருக்கும் சூழலில் கூட்டணி, தொகுதி பங்கீடு, வேட்பாளர்கள் தேர்வு, பிரசார வியூகம், பூத் கமிட்டிகளை வலுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு மாறாக, ராமதாஸ் மற்றும் அன்புமணி இருவரும் மாறி மாறி நிர்வாகிகள் நியமிப்பதில் தொடங்கி போட்டி பொதுக்குழுவை நடத்துவது வரை காய் நகர்த்தி வருகின்றனர்.

இதனால் கட்சியினர் மத்தியில் குழப்பமான நிலை உருவாகியது. நிர்வாகிகள் பலர் வேறு கட்சிகளுக்கு தாவும் நிலை ஏற்பட்டது. இந்த பரபரப்பான சூழ்நிலையில், அன்புமணி அணி தரப்பில் கடந்த வாரம் மாமல்லபுரத்தில் பொதுக்குழு நடத்தப்பட்டது. அப்போது, தலைவர் பதவி காலியாகிவிட்டதால், அன்புமணிக்கு பொதுக்குழு கூட்ட அனுமதியில்லை என்று ராமதாஸ் புகார் எழுப்பினர். இதுதொடர்பான சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. அதில் பொதுக்குழு நடத்த தடை இல்லை என்று உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து அன்புமணி அணியால் நடைபெற்ற பொதுகுழுவில், பாமக தலைவராக அன்புமணியின் பதவிக்காலம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டிப்பு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனால் மீண்டும் அன்புமணி பாமக தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அன்புமணி நடத்திய பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அன்புமணி அணி சார்பில் வினோபா என்பவர் தேர்தல் ஆணையத்தில் அறிக்கை தாக்கல் செய்தார்.

அன்புமணியின் இந்த அடுத்தடுத்த நகர்வுகள் ராமதாஸ் அணியை கடும் கோபத்துக்குள்ளாக்கியது. இதனால் அன்புமணிக்கு பதிலடி கொடுக்க ராமதாஸ் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் அன்புமணி நடத்திய பொதுக்குழு சட்டவிரோதம் என்று தேர்தல் ஆணையத்திற்கு பாமக நிறுவனர் ராமதாஸ் அணி கடிதம் அனுப்பியுள்ளது தமிழக அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது . (ஐ).

# பெண்களின் தவறல்ல...

**மரு. நாகஜோதி**

தனக்குப் பாலியல் சீண்டலோ பாலியல் வன்புணர்வோ நடந்துவிட்டது என பாதிக்கப்பட்ட பெண், பொதுவெளியில் சொன்னால், பலரும் அந்த குற்றவாளியின் மீது கோபம் கொள்வார்கள். உச்சபட்ச தண்டனை கொடுக்க வேண்டும் எனச் சொல்வார்கள்.

அந்தக் குற்றவாளிகள் தங்கள் வீட்டு ஆண்களாகவோ, தங்களுக்கு நெருக்கமானவர்களாகவோ இருந்தால், 'என் வீட்டுஆண்மகனா இப்படிநடந்துகொண்டான்? அய்யகோ!' என வருத்தப்படுவார்கள் சிலர். சிலரோ என் வீட்டு ஆணை, நான் அப்படி வளர்க்கவில்லை என வக்காலத்து வாங்கவும் செய்வார்கள்.

பாதிக்கப்பட்டப் பெண் பொதுவெளியில் தனக்கு நடந்த அநீதியைச் சொன்னவுடன், வன்புணர்வுக்கு ஆளானப் பெண் யார் என்ற கேள்வி எழும். அவள் பொதுவெளியில் தைரியமாகப் பேசுபவளாக இருந்தாலோ, அதிலும் நவநாகரிக (ஆழனநசn னுசநளள) உடை உடுத்துபவளாக இருந்தாலோ, அங்கேயே அந்த ஆண் குற்றவாளியின் மீதானக் கோபம், வெறும் கண்டிப்போடு நின்றுவிடும்.

கூடுதலாக, 'அந்த பெண் இப்படி உடை அணிந்தால், பொதுவெளியில் இப்படி வாயாடினால், யாராக இருந்தாலும் மனம் அலைபாயும்' என பொத்தாம் பொதுவான தங்கள் முத்தான வார்த்தைகளையும் சேர்த்து உதிர்ப்பார்கள்.

மேலும் கூடுதலாக, அந்தப் பெண் மது அருந்தியிருக்கும் வேளையில் பாலியல் சீண்டலுக்கோ வன்புணர்வுக்கோ ஆளானால், அவ்வளவு தான். ஏதோ அந்தப் பெண்ணே, தன்னை பாலியல் சீண்டலுக்கு ஒப்புக்கொடுத்தது போல பேசுவார்கள்.

'ஒரு பெண் எந்த நிலையில் இருந்தாலும், அவளது அனுமதியின்றி அவளைத் தொடுவதோ, வன்புணர்வதோ தவறு, அது மனிதமற்ற செயல்' என மட்டும் சொல்ல மாட்டார்கள்.

இதற்கு நாம் காரணம் கேட்டால், அந்தப் பெண் இப்படி பொதுவெளியில் வாயாடாமல் இருந்திருந்தால், நவநாகரிக உடை உடுத்தாமல் இருந்திருந்தால், அவள் மது அருந்தாமல் இருந்திருந்தால், அவள் அந்த இரவு வெளியில் செல்லாமல் இருந்திருந்தால், என, இப்படிப் பல 'இருந்திருந்தால்'களை அடுக்கி, அப்பெண் பாலியல் வன்புணர்வுஃசீண்டல் செய்யப்பட்டதற்கு காரணம் கற்பித்து, அவளுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதியை நீர்த்துப் போகச் செய்வார்கள். அல்லது அப்பெண்ணுக்கு அப்படி நடந்தது சரிதான் என நியாயம் கற்பிப்பார்கள்.

இத்தனையையும் தாண்டி, தனக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்க அப்பெண் புறப்பட்டால், குடும்ப கௌரவம், சமூக அந்தஸ்து ஆகியவைகள் உடைந்து விடும் எனச் சொல்லி, அப்பெண்ணை பொதுவெளியில் பேச அனுமதிக்க மாட்டார்கள். அதையும் மீறி அவள் சட்டத்தை நாடினால், அவளுக்கு நடந்த அநீதியை அவள் நிரூபித்து, அவளுக்கான நீதி கிடைப்பதற்கு முன் அவள் இந்த மண்ணை விட்டு மறைந்திருப்பாள்.

அப்படியே அவள் கண் முன்னே அந்தக் குற்றவாளிக்குத் தண்டனை கிடைத்தாலும், அவள் நிம்மதி பெருமூச்சு விட்டு கொஞ்சம் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் முன், தண்டனைக் காலம் முடிந்து, அந்தக் குற்றவாளி நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அவள் முன்னாலேயே நடமாடுவான். இன்னும் ஒரு படி மேலே சென்று, அவனது பெயரை மாற்றி அவனுக்கு சுயதொழில் செய்து சம்பாதிக்க தையல் மிஷினும் கொடுத்து அனுப்பும், **'So Called** மனிதாபிமானம்' காக்கும் நீதித்துறை.

ஒரு பெண்ணுக்கு அரசியல் காரணங்களாலோ, மதக் கலவரத்தை காரணம் காட்டியோ பாலியல் வன்புணர்வு நடந்திருந்தால், அதுவும் அப்பெண் விளிம்புநிலைஃசிறுபான்மை மக்களின் ஒருவராக இருந்து, குற்றவாளிகள் சமூகத்தின் அதிகார(சாதி, மதம், அரசியல்) பலத்தோடு இருந்தால், அந்தக் குற்றவாளி, குறிப்பிட்ட சாதியப் பின்புலத்தில் உள்ளவர் எனச் சொல்லி, நன்னடத்தைக் காரணமாக தண்டனைக் காலத்திற்கு முன்பே நீதிமன்றம் விடுவிக்கும். அந்தக் குற்றவாளிகளை ஆரத்தி எடுத்து மாலை அணிவித்து வரவேற்கும் ஒரு கும்பல்.

இதைப் படிக்கும் போது சலிப்பு ஏற்படலாம். 'பெண்ணாய் பிறந்ததே பாவம்' எனக்கூட பல பெண்கள் வருத்தப் படலாம். தனக்கு எதிராக அத்தனையையும் இந்த சமூகத்தில் கட்டமைத்து வைத்துள்ள ஆண்கள் மீது பெண்கள் கோபப்படலாம்.

தன் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைக்கு, அப்பெண் வருத்தப்படும் போதும், அங்கலாய்க்கும் போதும், தட்டிக்கொடுத்து ஆறுதல் சொல்பவர்கள், அவள் கோபம் கொள்ளும் போது, 'நீ எப்படி கோபம் கொள்ளலாம்?', 'எல்லா ஆண்களையும் நீ எப்படி குற்றம் சொல்லலாம்?', 'நான் என்ன அப்படியா?', 'அவன் தான் அப்படி செய்தான். நீ அவனை மட்டும் திட்டாமல், ஆண்கள் எனப் பொதுமைப் படுத்துவது ஏன்?' என, அவளது கோபத்தைக் கூட, சல்லடை கொண்டு சலித்து, வெளிப்படுத்தச் சொல்லி அவளை கட்டாயப் படுத்தும். கேட்டால், ஒரு ஆணின் தவறுக்கு மற்ற ஆண்கள் எப்படி பொறுப்பாக முடியும் எனக் கேட்பார்கள்.

நம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பெண்களும், ஏதோ ஒரு காலகட்டத்தில், ஏதோ ஒரு பாலியல் சீண்டலைக் கடந்துதான் வந்திருப்பார்கள். இங்கு எல்லாப் பெண்களும் பாதிக்கப்படும் போது, எல்லா ஆண்களையும்தான் பொது வெளியில் கேள்வி கேட்க வேண்டியுள்ளது.

காரணம், பாலியல் சீண்டல்ஃவல்லுறவு செய்யும் ஆண், ஏதோ ஒரு பெண்ணின் மகனோ சகோதரனோ அல்லது கணவனோதான். அவர்கள் அவர்களைச் சுற்றியுள்ள பெண்களுக்கு நல்லவர்களாக இருப்பார்கள். ஆனால், அனைத்துப் பெண்களுக்கும் அவர்கள் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள் என்பதற்கு, என்ன உத்தரவாதம் உள்ளது? அப்படியே உத்தரவாதம் உண்டு எனச் சொன்னால், இத்தனை வன்புணர்வுகளும் பாலியல் சீண்டல்களும் எப்படி நடக்கின்றன?

பாலியல் வன்புணர்வு செய்யும் ஆண்களின் மனநிலை என்ன என்பதை அறியும் வகையில் தாரா கௌஷல் **(Tara Kaushal)** எனும் எழுத்தாளர், பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ஒன்பது ஆண்களை சந்தித்து, அவர்களிடம் விரிவான விசாரணையை மேற்கொண்டார். அவற்றைத் தொகுத்து, 'றூால ஆநெ சுயிந' எனும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார். தாரா கௌஷல் அவர்கள் அந்த பாலியல் குற்றவாளிகளிடம் பல கேள்விகளைக் கேட்டார். அக்கேள்விகளுக்கு அந்த குற்றவாளிகள் பதிலளிக்கையில் அவர்களது ஆணுறுப்பு விரைப்படைந்ததையும், தாரா அவர்கள் இருக்கும் போதே அந்த ஆண்கள் அவர்களது ஆணுறுப்பை தொட்டதையும், அவர் பார்த்ததாக பதிவு செய்துள்ளார். **(Chapter: Our Savior is born>** பக்கம்: 6)


அப்படியானால் இடம் பொருள் ஏவல் என்பதோ, யார் தன் எதிரில் இருப்பவர் என்பதோ, ஆண்களின் வன்புணர்வு செயலுக்கு ஒரு பொருட்டல்ல என்பது தெளிவாகிறது. இந்நிலையில் பாதிக்கப்பட்டப் பெண்களையே குற்றம் சொல்வதும், குற்றவுணர்வுக்கு உள்ளாக்குவதும் எவ்வகையில் நியாயம்?


மேலும் பாலியல் வன்புணர்வு செய்யும் குற்றவாளிகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்ததை மட்டும் சேர்ந்தவர்களாகவோ, அல்லது குறிப்பிட்ட குணாதிசயம் கொண்டவர்களாகவோ மட்டுமில்லை. அனைத்து சமூக நிலைகளிலும் பாலியல் குற்றவாளிகள் இருக்கிறார்கள். இதைத் தான், பெண்ணியவாதியும் தத்துவவியலாளருமான கேட் மன்னே (முயவந ஆயநெ) அவர்கள், "பாலியல் வன்கொடுமை செய்யும் ஆண்களை 'அசுரர்கள்' என்று அழைப்பது தீங்கு விளைவிக்கும். அசுரர்கள் புரிந்துகொள்ள முடியாதவர்கள், விசித்திரமானவர்கள், மேலும் அவர்கள் வெளிப்படையாக பயமுறுத்துகிறவர்கள். பாலியல் வன்கொடுமை செய்பவர்களைப் பற்றி பயமுறுத்துவது என்னவென்றால், அவர்கள் ஆண்களாக இருக்க அதிக வாய்ப்புள்ளது என்பதைத் தாண்டி, அவர்களை அடையாளம் காணும் பிரத்யேக குறிப்புகள் மற்றும் தனித்த அம்சங்கள் இல்லாததுதான். பாலியல் வன்கொடுமை செய்யும் அனைவரும் மனிதர்கள். அவர்கள் நம்மிடையே அதிகம்", என்று குறிப்பிடுகிறார்.


பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகும் பெண்கள், குறிப்பிட்ட வயதை உடையவர்களாகவோ, குறிப்பிட்ட ஆடை அணிந்தவர்களாகவோ, குறிப்பிட்ட சமூக நிலையில் உள்ளவர்களாகவோ மட்டுமல்ல் எல்லா சமூக நிலைகளிலும் இருக்கிறார்கள். ஆனால் அத்தனை பாதிக்கப்பட்டப் பெண்களும் தங்களுக்கு நடந்த அநீதியை, பொதுவெளிக்கு கொண்டு வருவதோ, வழக்கு பதிவு செய்வதோ இல்லை. இந்தியாவில் 70 முதல் 80 சதவிகித பாலியல் வன்புணர்வு வழக்குகள் பதிவு செய்யப்படுவதில்லை என கணக்கெடுப்பில் தெரியவருகிறது.

ஒரு ஆண் பாலியல் குற்றவாளியாக இருந்தாலும், இந்தச் சமூகத்தில் வாழ எந்த விதமான தடையும் இருப்பதில்லை. அதற்கு முக்கியக் காரணம், அந்த ஆணை யாரும் குற்றவுணர்வுக்குள் தள்ளுவதில்லை. ஆனால், பாதிக்கப்பட்டப் பெண் தனக்கு இப்படியொரு அநீதி நடந்துள்ளது என வெளியில் சொன்னாலே, அவளை வார்த்தைகளால் இச்சமூகம் மீண்டும் மீண்டும் வன்புணர்வு செய்கிறது.

தன்மீது எந்தக் குற்றமும் இல்லாத போதும்கூட, பல பெண்களும் தனக்கு நடந்த அநீதியை, பாலியல் சீண்டலை வெளியே சொல்லத் தயங்குவது, இச்சமூகம் பாதிக்கப்பட்டப் பெண்களின் மீது வெளிப்படுத்தும், அவமானப்படுத்தும் வகையிலான அணுகுமுறையால் **(Victim Shaming)** தான்.





The oft-discussed[50] crotch-scratching habit of many Indian men can be seen as a consequence as well as a symbol of this penis privilege. When the heat makes nether regions itchy, it permits men to scratch, even in public. It also allowed the three of my subjects who were aroused when we were discussing the intimate questions to obviously, overtly touch themselves in my presence[†].



ஒரு சமூகமாக குரலற்றவர்களின் குரலாக நிற்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருப்பதும்தான் சரி. அதை விடுத்து பாதிக்கப்பட்டவர்கள் மீதே குற்றம் சொல்வது, பாலியல் வன்புணர்வாளர்களுக்கு நாம் ஒரு சமூகமாக ஆதரவு கொடுப்பதற்கு சமம்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக நம் சமூகம் இயங்க ஆரம்பிக்கும்போதுதான், தனக்கு நடந்தஃ நடக்கும் அநீதிகளை, வெளியே சொல்லும் தைரியம், பாதிப்படைந்த பெண்களுக்கு ஏற்படும். இதனால் பெரிய அளவிலான மாற்றங்கள் நடக்கவில்லையென்றால் கூட, பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான நீதியைப் பெரும் போராட்டத்தில், ஒரு தடங்கலாக இருக்கும் ஏஉைவஅை ளூயஅபைெ எனும் கல்லைக் கொஞ்சம் நகர்த்தி ஓரம் கட்ட முடியும். அதன் விளைவாக அவர்கள் நீதி பெறும் பாதை கொஞ்சம் இலகுவாகும்.

# அமெரிக்கா–சீன வர்த்தக போர் வரி விதிப்பு 90 நாட்களுக்கு ஒத்திவைப்பு: பின்வாங்கிய அதிபர் டிரம்ப்




அமெரிக்கா- சீனா இடையேயான புதிய வரி விதிப்பு நடைமுறைக்கு வருவதற்கு சில மணிநேரங்கள் முன்னதாக மேலும் 90 நாட்களுக்கு அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உலக நாடுகள் மீது வரிகளை விதித்து வருகின்றார். ஒப்பந்தம் எட்டப்பட்ட நாடுகளுக்கு குறைந்த வரி, ஒப்பந்தம் எட்டப்படாத நாடுகளுக்கு அதிக வரி விதிப்பு என்று அதிபர் டிரம்ப வரியை விதித்து வருகின்றார். மே மாதம் அதிபர் டிரம்ப் சீனா மீது 145 சதவீத வரிகளை விதிப்பதாக தெரிவித்தார். இதற்கு பதிலடியாக சீனா 125 சதவீத வரிகளை விதிப்பதாக தெரிவித்தது.

மேலும் அரிய வகை கனிமங்களை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்தது. இதனை தொடர்ந்து இரு நாடுகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வந்தன. அமெரிக்க விதித்த 145சதவீத வரி நடைமுறைக்கு வருவதற்கு சில மணி நேரங்கள் முன்னதாக டிரம்ப் இதனை நிறுத்தி வைத்தார். மே மாதம் ஜெனீவாவில் நடந்த அமெரிக்கா- சீனா பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைக்கு பிறகு இரு நாடுகளும் பரஸ்பரம் தங்களது வரிகளை 90 நாட்களுக்கு நிறுத்திவைப்பதற்கு ஒப்புக்கொண்டன. பின்னர் ஜூலையில் ஸ்டாக்ஹோமில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் உடன்பாடு எட்டப்படவில்லை. நேற்று நள்ளிரவு 12மணிக்கு ஏற்கனவே விதித்த காலக்கெடு முடிவடையும் என்று நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னதாக அமெரிக்கா- சீனா வர்த்தக போர் நிறுத்தம் மேலும் 90 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். மேலும் இந்த நீட்டிப்புக்கான உத்தரவில் அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டுள்ளார். ஒப்பந்தத்தின் மற்ற அனைத்து கூறுகளும் அப்படியே இருக்கும் என்றும் டிரம்ப் தனது சமூக வலைளத்தில் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அமெரிக்க-சீன வணிக கவுன்சிலின் தலைவர் கூறுகையில்,"இந்த கால நீட்டிப்பு இரு அரசுகளும் வர்த்த ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அவகாசம் அளிப்பதற்கு முக்கியமானது" என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## பல துறைகளில் விலைமதிப்பற்ற பங்களிப்பு இந்தியர் மீதான இனவெறி தாக்குதலுக்கு அயர்லாந்து அதிபர் கண்டிப்பு




அயர்லாந்தில் இந்திய சமூகத்தினர் மீது சமீபத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களை அந்நாட்டு அதிபர் மைக்கேல் டி ஹிக்கின்ஸ் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

அயர்லாந்தில், கடந்த சில வாரங்களில் இந்திய சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக பல கடுமையான தாக்குதல்கள் நடந்து உள்ளன. ஜூலை 19ம் தேதி இந்தியாவைச் சேர்ந்த 40 வயதான அமேசான் ஊழியர் ஒருவர், டப்ளினின் டல்லாஹற்டில் ஒரு டீனேஜ் கும்பலால் தாக்கப்பட்டார். இதை தொடர்ந்து, 32 வயதான சந்தோஷ் யாதவ் டப்ளின் அபார்ட்மெண்டிற்கு அருகில் ஆறு இளைஞர்களால் தாக்கப்பட்டார், இதனால் அவருக்கு கன்னத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

அதுமட்டுமின்றி, ஆறு வயது இந்திய சிறுமியை அந்நாட்டை விட்டு வெளியேறும்படி சிறுவர் கும்பல் ஒன்று தாக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது. ஜூலை மாதத்தில் மட்டும் 3 இந்தியர்கள் மீது இனவெறி தாக்குதல் நடந்துள்ளது. இந்தத் தாக்குதல்களை அயர்லாந்து அதிபர் மைக்கேல் டி ஹிக்கின்ஸ் கண்டித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்திய சமூகம் அயர்லாந்தின் மருத்துவம், செவிலியர், பராமரிப்பு, கலாச்சாரம், வணிகம் மற்றும் தொழில்முனைவு போன்ற பல துறைகளுக்கு விலைமதிப்பற்ற பங்களிப்பைச் செய்துள்ளது. இந்திய சமூகத்தினர் மீதான சமீபத்திய தாக்குதல்கள் அயர்லாந்தின் மதிப்புகளுக்கு முரணானவை.

இந்த தாக்குதல் சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டியவை. இது போன்ற செயல்கள் முழு சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்கும். அயர்லாந்து, அனைத்து சமூகங்களும் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் பரஸ்பர மரியாதையுடன் வாழக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அயர்லாந்தில் இந்தியர்கள் தாக்கப்படுவதை கருத்தில் கொண்ட அந்நாட்டில் உள்ள இந்திய துாதரகம், ஆலோசனைகளை வழங்கி, அவசர உதவி எண்களைப் அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பலூசிஸ்தான் விடுதலைப்படை பயங்கரவாத அமைப்பு: பாகிஸ்தானுக்கு ஆதரவாக அமெரிக்கா நடவடிக்கை!

பாகிஸ்தானில் இயங்கும் பிரிவினைவாத அமைப்பான பலூசிஸ்தான் விடுதலைப்படையை (டீடுயு) பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. பாகிஸ்தானில் கனிமவளம் நிறைந்த மலைகள் கொண்டது பலுசிஸ்தான் மாகாணம். இதை தங்களின் தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று கோரி பலூசிஸ்தான் விடுதலை படை அந்நாட்டுக்கு எதிராக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. 2024ம் ஆண்டு பாகிஸ்மான் கராச்சி விமான நிலையம், குவெட்டா ஆகிய இடங்களில் பலூசிஸ்தான் விடுதலை படை தற்கொலைப்படை தாக்குதல் நடத்தியது. இது தவிர குறிப்பிட்ட இடைவெளியில் பாகிஸ்தான் ராணுவத்திடமும் சண்டையிட்டு வருகிறது.



இந்நிலையில் தொடர் வன்முறை தாக்குதல்களை அடுத்து, பலூசிஸ்தான் விடுதலை படை மற்றும் அதன் மற்றொரு பெயரான மஜீத் படைப்பிரிவை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறது. அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இந்த அறிவிப்பை செய்திக்குறிப்பு மூலம் வெளியிட்டு உள்ளார். அதில் அவர் கூறி உள்ளதாவது பலூசிஸ்தான் விடுதலை படையின் வன்முறை நடவடிக்கைகள் மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன. மேலும், பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை சீர்குலைத்தும் வருகின்றன. வெளியுறவுத்துறையின் இந்த நடவடிக்கை பயங்கரவாதத்தை எதிர்க்கும் அதிபர் டிரம்ப் நிர்வாகத்தின் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது. பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான ஆதரவை குறைப்பதற்கு இதுவே ஒரு சிறந்த வழி. இவ்வாறு அவர் கூறி உள்ளார். பாகிஸ்தான் ராணுவத் தளபதி அசிம் முனீர் அமெரிக்காவில் இருக்கும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ஐ)

# வாஷிங்டன் பொலீஸ் கட்டுப்பாட்டை கையில் எடுத்தார் அமெரிக்க அதிபர்

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் போலீஸ் துறை மாகாண அரசின் கட்டுப்பாட்டில் இருந்த நிலையில், குற்றங்கள் அதிகரித்ததாக கூறி அத்துறையை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் உத்தரவில் அதிபர் டொ னால்டு டிரம்ப் நேற்று கையெழுத்திட்டார். அமெரிக்காவின் தலைநகராக செயல்படுவதற்காக உருவாக்கப்பட்ட பகுதி வாஷிங்டன். இந்த நகரின் போலீஸ் துறை மேயர் முரியல் போவ்சர் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

கடந்த வாரம் அரசு முன்னாள் ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டார். இதையடுத்து அதிபர் டிரம்ப், நகரில் குற்றச்சம்பவங்கள் அதிகம் நடப்பதாகவும், தலைநகரின் போலீஸ் துறை யை தன் கட்டுப்பாட்டின் கீழ் எடுக்க உள்ளதாகவும் கூறியிருந்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'வீடு இல்லாதவர்கள் நகரை விட்டு வெளியேறுங்கள். உங்களுக்கு தங்கும் இடம் வழங்கப்படும். ஆனால் நகரை விட்டு தொலைவில் இருக்கும். குற்றவாளிகள் வெளியேற வேண்டியதில்லை. உங்களை சிறையில் அடைக்க போகிறேன்' என்றா ர்.

இந்நிலையில், அதிபர் டிரம்ப் நேற்று குற்ற அவசர நிலையை அறிவித்து, போலீஸ் துறையை தன் அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தார். இது குறித்து அவர் கையெழுத்திட்ட உத்தரவில் கூறியுள்ளதாவது:

வா ஷிங்டனில் குற்றங்கள் கட்டுப்பாட்டை மீறியுள்ளன. கொலை மற்றும் கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அரசு ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் சுற்றுலா ப் பயணியருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் போலீஸ் துறையை என் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்த தீர்மானிக்கிறேன். இந்த உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வருகிறது .(ஐ)

## பேருவளையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து நேற்று மாலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பேருவளை, பதனாகொடகம பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இரண்டு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் மனைவி வேலை நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதால் அவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலமானது வீட்டில் உள்ள கட்டில் மேதுள்ளனர். தனர்.

இது தொடர்பான தீவிர விசாரணைகளை பேருவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சீதுவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்குதலில் படுகாயமடைந்த மேற்படி நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரியகஹலிந்த பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எந்தச் சந்தேகநபர்களும் கைது செய்யப்படவில்லை.

மேலும் சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கைது செய்ய சீதுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மௌலானா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

தற்போதைக்கு அசாத் மௌலானா வெளிநாட்டில் தலைமறைவாக வாழ்ந்து வரும் நிலையில் கடுமையான முயற்சிகளின் பின்னர் அரசின் முக்கியஸ்தர்கள் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

அதன் பிரதிபலனாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்கவும், அது தொடர்பில் விரிவான வாக்குமூலம் ஒன்றை வழங்கவும் அசாத் மௌலானா இலங்கை வர சம்மதம் தெரிவித்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

வெகுவிரைவில் அவரை இலங்கைக்கு அழைத்து வரும் செயற்பாடுகளை அரசு முன்னெடுத்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

## மௌலானா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில், பெண்ணின் பெற்றோர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தனர்.

அதன்போதே மாலை தொண்டைமானாறு கடல் நீரேரியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறி புகைப்படங்களைப் பெற்றோரிடம் காட்டியுள்ளனர்.

அதையடுத்துப் பெற்றோர் சடலமாக மீட்கப்பட்ட பெண் தமது மகளே என அடையாளம் காட்டியுள்ளனர்.

அதேவேளை, சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், பரிசோதனை அறிக்கை வெளிவந்த பின்னரே உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் கூற முடியும் என்று தெரிவித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சாணக்கியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று புதன்கிழமை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விடுத்த அழைப்புக்கிணங்க காந்தி பூங்காவில் இன்று காலை 9 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா.சிறிநேசன், வைத்தியர் இ.சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் மற்றும் பிரதேச சபை சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## யாழ். செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு நாளை!

யாழ். செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு நாளை மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இடம்பெற்ற அகழ்வாய்வின் போது இதுவரை 147 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் 133 என்புத்தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில், இரண்டாம்கட்ட அகழ்வுப்பணிகளின் இரண்டாம்கட்ட நடவடிக்கைகள் முடிவுக்கு வந்திருந்தன.

இரண்டாம்கட்ட அகழ்வுப்பணிகளின் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில், செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு நாளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்படவுள்ளது.

புதைகுழியின் மண் மாதிரிகள் தொடர்பான அறிக்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் நீதிமன்றத்தால் கோரப்பட்டிருந்த நிலையில், நாளைய தினம் இடம்பெறவுள்ள வழக்கு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த அகழ்வுப்பணிகளின்போது தரையை ஊடுருவும் ராடர் அமைப்பின் மூலம் ஸ்கான் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அது தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளது. அந்த அறிக்கையும் சிலவேளைகளில் நாளை சமர்ப்பிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க மருந்தாளுநர்கள் சங்கம் முன்னெடுத்துள்ள 24 மணிநேர அடையாள வேலைநிறுத்த போராட்டம்!

குருநாகல் போதனா வைத்தியசாலையில் அரசாங்க மருந்தாளுநர்கள் சங்கம் இன்றையதினம் (13) 24 மணிநேர அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தகுதிவாய்ந்த மருந்தாளுநர்கள் தங்கள் சேவைகளை வழங்கும் போது, சேவை அவசியமின்றி தகுதியற்ற மருந்து கலவை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ள காரணத்தால், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்க மருந்தாளுநர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் திலகரத்ன தெரிவித்தார்.

தகுதியற்ற மருந்து கலவை நிபுணரை வைத்தியசாலைக்கு நியமித்தமை தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு இரண்டு முறை அறிவிக்கப்பட்ட போதிலும், அதிகாரிகள் இந்த விடயத்தை புறக்கணித்ததன் காரணமாக இவ்வாறு அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுத்துள்ளதாக அஜித் திலகரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் விசேட கலந்துரையாடல்!

எதிர்க்கட்சிகளின் விசேட கலந்துரையாடல் ஒன்று முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் நாளை இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜி.எல். பீரிஸின் இல்லத்தில் கடந்த வாரம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக நாளையும் இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எனினும் அரசாங்கத்துக்கு நேரடியாக சவால் விடும் நோக்கத்துடன் கூட்டணியை உருவாக்க இந்த கலந்துரையாடல் பயன்படுத்தப்படாது என்றும், எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை உருவாக்குவது மட்டுமே இதன் நோக்கம் என்றும் எதிர்க்கட்சி அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

# இராணுவத்தின் கட்டுப்பாடுகளில் உள்ள தனியார் காணிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை!

வலி வடக்கில் இராணுவத்தின் கட்டுப்பாடுகளில் உள்ள தனியார் காணிகளை விடுவித்து, அக்காணிகளில் மக்கள் சுதந்திரமாக விவசாயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, ஜனாதிபதியிடம் வலி வடக்கில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காணிகளின் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இன்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிந்து 16 வருடகாலம் ஆகிய போதும் பாதுகாப்பு காரணங்களுக்காக என கூறி தனியார் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ள இராணுவத்தினர் அதில் விவசாயம் செய்கின்றனர்.

காணி உரிமையாளர்கள் விவசாயம் செய்ய முடியாது வறுமையில் வாடுகின்றனர். தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து விவசாயம் செய்வது சட்டவிரோதமானது.

அது மாத்திரமின்றி மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் இராணுவத்தினர், எவ்வாறு விவசாயம், பண்ணை, வியாபாரங்கள் நடத்தி வருமானத்தை பெற முடியும்? அவ்வாறு பெறப்படும் பணம் எங்கே செல்கின்றது? அந்த பணம் திறைசேரிக்கு அனுப்பப்படுகிறதா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

எனவே யுத்தம் முடிந்து 16 வருட காலமாக பாதுகாப்பு காரணம் என கூறி தனியார் காணிகளை அடாத்தாக பிடித்து விவசாயம் செய்து வருமானத்தை ஈட்டி வருவதானல் காணி உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்க வேண்டும்.

அதேவேளை அவர்களின் காணிகளை உடனடியாக விடுவித்து, அவர்களை விவசாயம் செய்து வாழ்வாதரத்தை மேம்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் நடந்து செல்லவோ, துவிச்சக்கர வண்டியில் செல்லவோ முடியாத நிலை காணப்படுவதுடன், இரவு 07 மணி முதல் காலை 06 மணி வரையில் போக்குவரத்துக்கு தடை போன்ற கட்டுப்பாடுகளுடன் திறக்கப்பட்டுள்ள பலாலி வீதியால் மக்கள் சுதந்திரமாக போக்குவரத்து செய்வதற்கு கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

நொச்சியாகம, ஒக. 13

புத்தளம் - திருகோணமலை பிரதான வீதியில் புத்தளத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்த அதிசொகுசு பஸ் ஒன்று சைக்கிளைத் தள்ளிக்கொண்டு பாதையைக் கடக்க முற்பட்டவர் மீது மோதியுள்ளது.


இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதில் பலத்த காயமடைந்த மேற்படி நபர் நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார்.

உயிரிழந்த நபர் 54 வயதுடைய நொச்சியாகம, மொரவக கந்த பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# சிறுத்தை உயிருடன் மீட்பு!



கண்டி, ஒக. 13

கண்டி, பல்லேகலை முதலீட்டு வலையத்தில் உள்ள காட்டுப் பகுதியில் கம்பியைப் பயன்படுத்தி வைக்கப்பட்டிருந்த பொறி ஒன்றில் சிக்கியிருந்த சிறுத்தை ஒன்றை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுப் பாதுகாப்பான ஓரிடத்தில் அதனை விடுதலை செய்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக ரன்தெனிகல வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு சென்ற குழுவினர் மேற்படி சிறுத்தைக்கு மயக்க ஊசி செலுத்தி அதனைப் பொறியில் இருந்து மீட்டெடுத்தனர்.

பின்னர் அந்தச் சிறுத்தையை அவர்கள் ரந்தெனிகல பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பான இடத்தில் விடுவித்தனர்.

வனஜீவராசிகள் திணைக்கள மிருக வைத்தியர் அக்கலங்க பினிதிய தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 6 - 7 வயது மதிக்கத்தக்க நன்கு வளர்ந்த மேற்படி ஆண் சிறுத்தைக்கு எதுவித உட்காயங்களும் இருக்கவில்லை என்றும், எனவே அதன் வெளிக்காயங்களுக்கு மட்டும் அவசியமான சிகிச்சையை வழங்கி அதனைக் காட்டில் விடுவித்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!